Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 249

யாழ்ப்பாணம் ஐப்பசி 1 ஷஃபான் 27 திங்கட்கிழமை (18-10-71)

தீபாவளி வாழ்த்துக்கள்

அனைவருக்கும் எமது உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அதிபர்,

மில்க்வைற்
சோப்தொழிற்சாலை

த. பெ. இல 77
யாழ்ப்பாணம்.

# ஆசிரியர்கள் வினாக்கொத்தை நிரப்பியனுப்பத்தேவையில்லை

## ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபை அறிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

வடமாநிலக் கல்வி அதிபரினால் க.பொ.த. (1970) வகுப்புகளுக்கு போதித்த வடபகுதி ஆசிரியர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வினாக்கொத்தை ஆசிரியர்கள் அனைவரும் நிரப்பி அனுப்பவேண்டியதில்லை என வடபிரதேச ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இக்கூட்டுச்சபையின் பதில் தலைவர் திரு. வ. கிருஷ்ண பிள்ளை, செயலாளர் திரு. எஸ். சபாநடேசன் ஆகியோர் இந்த அறிக்கையை இன்று வெளியிட்டார்கள்.

க.பொ.த. (1970) வகுப்புப் பரீட்சை சம்பந்தமாக அவ்வகுப்புகளுக்குப் போதித்த ஆசிரியர்களிடமிருந்து விளக்கம் பெறும்வகையில் வினாக்கொத்துப் படிவம் ஒன்றைச் சகல பாடசாலைகளுக்கும் கல்வியதிபதி அனுப்பியிருந்தார். இந்தப்பத்திரம் ஆசிரியர்களைத் தவறாக எடைபோடும் விதத்தில் அமைந்துள்ளதால் இதை வாபஸ்பெறவேண்டுமென்றும் இதை நிரப்ப வேண்டாமென்றும் ஆசிரியர் சங்கங்கள் கோரியிருந்தன.

வட இலங்கைத் தமிழாசிரியர்சங்கம், வடமாகாண ஆசிரியர் சங்கம், வடபிரதேச ஜாதிக குருசங்கமய, வடபிரதேச அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கம், வடபிரதேச உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம், ஆசிரியர்கள் கூட்டுச்சபை உட்பட மற்றும் பல ஆசிரியர் சங்கங்களும் இப்படிவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தன.

இப்படிவம் குறித்து இறுதி முடிவு எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டு வடபிரதேச ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபை இன்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

க.பொ.த. (1970) வகுப்புகளில் சென்ற ஆண்டு கற்பித்த ஆசிரியர்களுக்கு வடமாநிலக் கல்வியதிபதியால் அனுப்பப்பட்ட வினாக்கொத்துப் படிவம் சம்பந்தமாகக் கல்வி அமைச்சில் கல்வி மா அதிபதியிடம் வடமாகாண ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபையினது தூதுக்குழுவொன்று ஜதிக குரு சங்கமயப் பொதுக்காரியதரிசி திரு. எல். ஆரியவன்ச தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தியது. வினாக்கொத்தில் அநேக வினாக்கள் பொருத்தமற்றவை என ஏற்றுக்கொண்டு இதுபற்றி வடமாநிலக் கல்வியதிபதியிடம் விளக்கம் கோரி ஏற்ற நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். ஆகவே கல்வி மா அதிபதியின் முடிவு வரும்வரையும் இப்பத்திரத்தை நிரப்ப வேண்டாமென ஆசிரியர் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

## விமானச் சேவை நிறுத்தப்படும்

கொழும்பு, ஞாயிறு

மலேஷியா - சிங்கப்பூர் விமான சேவை நிறுவனம் கொழும்புக்கும் சென்னைக்குமிடையில் நடத்திவந்த விமானச் சேவை நிறுத்தப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

## 'வடபகுதி எம். பி க்களின் ஒத்துழைப்பு தேவை'

### — விளையாட்டுத்துறை அமைச்சர்

மாவிட்டபுரம், ஞாயிறு

'நாட்டுக்குப் பெரும் பயன் அளிக்கக்கூடியதாக விளங்கும் காங்கேசன்துறை துறைமுகம் போன்ற மற்றும் பல அபிவிருத்தி வேலைகளை நாம் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளோம். இவ்வேலைகள் தொடங்கினால் அதைப் பூர்த்திசெய்யக்கூடிய வசதி உண்டா என்று ஆலோசித்தே வேலைகளை ஆரம்பிக்கவேண்டும். தற்சமயம் இத்திட்டம் பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம். விரைவில் காங்கேசன்துறை துறைமுகம் உட்பட மற்றும் அபிவிருத்தி திட்டங்களும் செயல்படும்"

வடபகுதிக்கு விஜயம் செய்துள்ள ஆட்சிமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. இரத்னாயக்கா காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை விருந்தினர் விடுதியில்

(10-ம் பக்கம் பார்க்க)

வாசக நேயர்கள், விளம்பரதாரர்கள்

அனைவருக்கும்

'ஈழநாடு'

தனது உளம் நிறைந்த

தீபாவளி வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கின்றது.

## ஒடுவிரித்த வாலிபருக்கு 6 மாத கடுழியம்!

மாவிட்டபுரம், ஞாயிறு

பட்டப்பகலில் ஓடுபிரித்து வீட்டில் திருட முயற்சித்த 29 வயது இளைஞன் கையும் மெய்யுமாக அகப்பட்டார். இவரிடம் வீடு உடைக்கும் கருவிகளும் இருந்தனவாம்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த ஸ்ரீ பொன்னம்பலம் என்பவரின் வீட்டில் பட்டப்பகலில் வீட்டின் கூரை ஓட்டைப்பிரித்து உள்இறங்கி திருட முயற்சித்த சமயம் 29 வயதுள்ள வே. அருணாசலம் என்னும் இளைஞன் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டான்.

சம்பவதினம் பிரஸ்தாப இளைஞன் மேற்படி வீட்டில் இறங்கி அலுமாரியை உடைத்தசமயம், வீட்டுக்கு அருகால் சென்ற எஸ் விஸ்வநாதன் என்பவர் சத்தம் கேட்டு உள்ளே பார்த்தபின் ஊரைக் கூட்டிவந்து அந்த இளைஞரைப் பிடித்தனர்.

இவ்வாலிபரை சோதனை செய்தசமயம் அவரிடம் ஒரு இரும்புக்கத்தியும், பூட்டுடைக்கும் ஆயுதங்களும் இருந்தன.

இதையடுத்து அவ்வாலிபர் சுன்னாகம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சுன்னாகம் பொலிசார் இது குறித்து தீவிர விசாரணை நடாத்தி பிரஸ்தாப நபரை மல்லாகம் மாஜிஸ்திரேட் எஸ் சிவானந்தன் முன்னிலையில் ஆஜர் செய்தார்கள்.

மாஜிஸ்திரேட் அவ்வாலிபருக்கு 6 மாத கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## “தமிழரின் சரித்திரத்தை வித்தியானந்தன் ஆராயவேண்டும்”

### உதவி அரசாங்க அதிபர் உரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

“பாரிஸ் மாநகரில் சுமார் 2000 தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்கள் எல்லாரும் தமிழ் உணர்வு மிக்கவர்களாக காணப்படுகின்றனர். அவர்களுக்கு இப்படியான தமிழ் உணர்வு ஏற்படக்காரணமாக விருந்தவர் கலாநிதி சு. வித்தியானந்தன் தான்”

யாழ். சுபாஸ் விருந்தினர் விடுதியில் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனை பாராட்டி நடத்தப்பட்ட கூட்டத்தில், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம், பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை கூறியதாவது: தமிழர்களுடைய சரித்திரத்தை வித்தி[illegible] தமிழர்கள் இலங்கையில் எப்போது வாழ்ந்தார்கள்? பாண்டியன்படை எடுப்பிற்குப்பின்பா? அல்லது விஜயனின் வருகைக்குப்பின்பா? என்பதை ஆராயவேண்டும். கிறிஸ்து பிறப்பதற்குமுன் ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்திருக்கவேண்டும்.

1941-ம் ஆண்டளவில் மன்னாரில் ஏழு நாள் கூத்து நடந்து வந்துள்ளது. இது படிப்படியாக குறைந்து ஒரு நாள் கூத்தாகி முடிவில் கூத்தென்றால் என்னவென்று அறியமுடியாதபடி மறைந்துவிட்டது. மறைந்திருந்த கூத்துக்கு புத்துயிர் அளித்தவர் திரு. சு. வித்தியானந்தன் தான் என்றார் வி. கந்தவனம். பேசும்போது புலவர் என்னைப்பாட மாட்டாரா என்று முற்காலத்தில் மன்னர்கள் வாஞ்சித்தார்களென்றும் தக்காரை அன்றி தகவிலாரைப்பாடும் நோக்கம் தமிழ்ப் புலவனுக்கில்லை யென்றும் அந்த உயர் நோக்கையே இன்[illegible] உயிர் நோக்காகக்கொண்டு வாழும்புலவர்கள் எல்லா வகையிலும் தகவுடைய பேராசிரியர் வித்தியானந்தனை மனதாரப்பாடியுள்ளனர் என்றார்.

யாழ்ப்பாணம் பிரதம கல்வியதிகாரி திரு. அ. சந்திரசேகரம்பிள்ளை தலைமையுரையில் பேசுகையில் பழமையைத்தேடி எடுத்து புதுமையை படைத்துவரும் திரு. சு. வித்தியானந்தன் மலையகத்திலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார் என்றும் எல்லா தமிழ் மக்களின் உள்ளத்திலேயும் தமிழுணர்ச்சியை ஏற்படுத்தினார் என்றும் கூறினார்.

திரு. க. சொக்கலிங்கம் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி திரு பொ. சபாரத்தினம் உட்படப்பலர் உரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

உங்கள் ஜவுளித் தேவைகளை
பூர்த்தி செய்துகொள்ள மறவாதீர்கள்!

கணேசானந்தாஸ்

(முட்டாசுக்கடைச் சந்தி)
208, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.

சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த

நூற்றுக்கு நூறு

சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த

காவியத்தலைவி

17-10-71 பி. ப. 6-30 க்கும், 18-10-71 பி. ப. 2-30, 6-30 க்கும் றீகல் தியேட்டரிலும் காண்பிக்கப்படும்.

சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்

தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

நாட்களல்ல; வாரங்களல்ல; மாதங்கள் பல தொடர்ச்சியாக......
தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்கள் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டிய சித்திரம்
இப்பொழுது யாழ். மக்களை மகிழ்விக்க
தீபாவளி விருந்தாக

லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.

ராஜேஷ்கன்னா
ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார்
மதன்லால்
நடித்த
சக்தி பிலிம்ஸ்
ஈஸ்ட்மென்கலர் சித்திரம்



ஆராதனா

2-வது வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு, 4 காட்சிகள்.

அக்கா தங்கை

* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா
* சுந்தரராஜன் சௌகார் ஜானகி
இன்னும் பலர் நடித்தது

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

பட்டுச் சேலைகள் விற்பனவு! தீபாவளியா! திருமணமா!! உங்களுக்கு வேண்டிய பட்டுச்சேலைகள், முதலியவைவற்றுக்கு விஜயம் செய்யுங்கள். வசந்தபுரம் சிலக்ஸ், 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3639

### விற்பனைக்கு

ராதா செவ்விளநீர் எண்ணை தினமும் தலையில் தேய்த்துவருவதனால் கூந்தல் நீளமாக வளரும். மனோரம்மியமான வாசனை கொண்டது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். செட்டியார் தெரு, கொழும்பு. 3624

சினிமா ரசிகர்களுக்கும்
மற்றும் அன்பர்களுக்கும்
எமது உளம்நிறைந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

வெல்லிசினிமா
(மானிப்பாய்)
இன்று 4 காட்சிகள்
சிவாஜி - வாணிஶ்ரீ
நடித்த

நிறைகுடம்

சினிமா ரசிகர்களுக்கும்
மற்றும் அன்பர்களுக்கும்
எமது உளம்நிறைந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4 30
சனி, ஞாயிறு:10-30
SHENA DOAH

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
மதுரைவீரன்

சினிமா ரசிகர்களுக்கும்
மற்றும் அன்பர்களுக்கும்
எமது உளம்நிறைந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

றீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-00,
இரவு 10-00 மணி
எம். ஜி. ராமச்சந்திரன்
தேவிகா
நடித்த
ஆனந்தஜோதி

Daily 10-30 only
Michal Caine
in
DEAD FALL
(Color)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 1-ம் திகதி
திங்கட்கிழமை
(18-10-71)

மேஷம்- நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

ரிஷபம்- பிதாவழிமூலம் பொருள் வரவு கிடைக்கும். தரும கைங்கரியங்களில் விருப்பம் மேலிடும்.

மிதுனம்- கட்டுவியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு. புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருத்தப்படலாம். பணபலமும் உண்டு.

கடகம்- அறவழிமூலம் கற்றவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

சிம்மம்- நாடக கலைஞர்களுக்கு நன்மையான தினம். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. சிறப்பான தினம்.

கன்னி- உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்துக. பிரயாணத்தைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது சுபதினம்.

துலாம்- வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு. கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும். அறிஞர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

விருச்சிகம்- தொழில் துறையில் பதவிஉயர்வுக்கும் இடமுண்டு. சிலர் வாழ்க்கையில் சாதகமில்லாகாரமும் ஏற்படலாம்.

தனுசு- கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் கவலைப்படுவீர்கள். பெரியவர் ஒருவர் ஆதரவளிக்க முன்வருவார். அடக்கம் விரும்பத்தக்கது.

மகரம்- நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று சமரசமாக முடிவடையும். காதல் விவகாரங்களுக்கு இடம் உண்டு. சிறப்பான தினம்.


கும்பம்- செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் சிலர் கடன்படவும் நேரிடலாம். தெய்வ நம்பிக்கை நன்று.

மீனம்- தெய்வவழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். கால் நடைவிருத்திக்கும் இடமேற்படமுடியும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

பருத்தித்துறை ஞாயிறு
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இயற்கை விஞ்ஞான மன்ற ஆரம்பக் கூட்டத்தில் திரு எஸ். கந்தசாமி 'கற்பதற்கான விஞ்ஞான முறை' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினர்.
மற்படி மன்ற உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
தலைவர்: திரு பி விவேகானந்தன். உபதலைவர்: திரு கே சிவராமலிங்கம், செயலாளர்: திரு கே நவராசா. பொருளாளர்: திரு ஆர் இராசதுரை, பத்திராதிபர்: திரு என் செல்வராசா,

சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!



மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
உதயகுமார், சைலஶ்ரீ
ஜோதிலட்சுமி
நடித்த

கள்வனுக்கு கள்வன்

ரஸிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்
தமது அன்பு கலந்த
தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த

ஒளி விளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
தங்க, வைர
நகைவியாபாரிகள்
பொ. அம்பலவாணர்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7199.

ஈழநாடு
EELA NADU
தீபாவளி சிறப்பிதழ்

அன்பர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது இதயங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
ராஜ்கோபால்ஸ்
(பிரபல ஜவுளி மாளிகை)
36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்

# உண்மைத் தீபாவளி எது?

விழாக்கள் புனிதமானவை. அவற்றைப் புனிதமாகக் கொண்டாடவேண்டியது அவற்றைக் கொண்டாடும் ஒவ்வொருவரதும் தலையாய கடன். நாம் தீபாவளிப் பண்டிகை தவிர மற்றும் பண்டிகைகளை தெய்வ வணக்கத்துடன் பயபக்தியோடு கொண்டாடுகிறோம். பொங்கல்பண்டிகையை எடுத்துக்கொள்ளுங்கள் உழவுத் தொழிலுக்குவந்தனை செய்து இயற்கைத்தெய்வமாம் சூரியனை வழிபட்டு எத்தனையோ புனிதத்துடன் விரதம் அனுஷ்டித்து மகிழ்கிறோம். சித்திரைப் புத்தாண்டைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அன்று ஆலயங்களுக்குச் சென்று எத்தனையோ பூசைகள் ஆராதனைகள் செய்து கொண்டாடுகிறோம். ஆனால் ஏன் இத்தீபாவளிக்கு மட்டும் இந்தத் தலைவிதி!

## தீபாவளி என்றவுடன்

தீபாவளி என்றவுடன் தீபாவளித் தினத்தன்று பக்குவோட என மாதக்கணக்காக இராப்பகல் தீனி போட்டு பிள்ளைகள்போல் வளர்த்த ஆட்டுக்கடாக்கள் நம்மிற் பலர்முன் தோன்றி வாயில் ஜலத்தையும் வயிற்றில் பசியையும் உண்டாக்குகின்றன. ஆடவர் பலரது மனதில் மதுப்புட்டிகள் படக்காட்சியாகத் தோன்றி இன்பமயக்கத்தைக் கொண்டுவருகின்றன. இதுமட்டுமா? நம் மங்கையர் மனங்களில் அழகழகான உயர்ரக வண்ணச் சேலைகள் ஆணித்தரமாகத் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொள்ளுகின்றன. சிறுவர்களை விட்டுவிட்டோமே. அன்னையையும் பிதாவையும் முன்னறிதெய்வங்களாகக் கொண்டவர்களல்லவா இவர்கள். எனவே மாதா பிதா மனத்தைத்தானே இவர்களும் பிரதிபலிப்பார்கள். இவர்களுக்குப் புத்தாடையும் பட்டாசும் சினிமாவும்தான் தீபாவளிக்கனவு தெய்வசிந்தனை சிறிதேனும் இவர்கள் சிந்தையில் இடம்பெறுது.

## எது தீபாவளி

இந்த ஆசாபாசங்களில் பூரணமாக நம் மனதைப் புதைத்துவிடுவதுதான் தீபாவளியா? உண்மையில் மற்றைய பண்டிகைகளின் புனிதத்தன்மை இத்தீபாவளித் திருநாளிலும் துலங்கவேண்டும் காரணம் என்னவென்று கேட்கிறீர்களா? தீபாவளியின் தத்துவத்தை உணரச் சற்றுப் பின்னுக்குச் செல்லுங்கள்.

நரகாசுரன் ஒருவன் நம் முன்னோரை ஆண்டாண்டு காலமாக வதைத்து அடிமைப்படுத்தி கொடுமைப் படுத்திவந்தான். மக்கள் இன்பஒளியின்றித் துன்ப இருளில் மூழ்கிக்கிடந்தனர். இருள் பண்டிய சூழலில் வாழ்ந்த மக்கள் சும்மா வாழ விரும்பவில்லை. உலகத்தை உய்விக்க எண்ணற்ற பல லீலைகளைப்புரிந்த கண்ண பரமாத்மா தங்களை விடுவிக்க விடார் தங்களை உதவிக்கரம் நீட்டி ஆதரித்து அருட்கண்நோக்குவார் என்பதை நன்குணர்ந்து அவரை அல்லும் பகலும் வணங்கினர். தம் அடியாரின் சித்தத்துட் புகுந்து அவர் உளநோய் நீக்கும் பரமாத்மாவும் அவர்களுக்கு கருணைகூர்ந்து எழுந்தருளிவந்து தம்மடியார்களை வதைத்த நரகாசுரனை வதம் செய்தார். அன்றையதினம் தாம் வேண்டியவற்றை வேண்டியவாறு ஈர்ந்தருளிய கிருஷ்ணபரமாத்மாவை மக்கள் ஆனந்தக்கூத்தாடி வழிபட்டனர். இருள் ஒழிந்தது ஒளிவந்துவிட்டது என்பதையுணர்த்த இல்லங்கள் தோறும், வீதிகள் எங்கனும் தீபாலங்காரம் செய்தனர். தங்களை வதைத்த அரக்கனுக்கு தலைமுழுகும் வண்ணம் எண்ணெய்தேய்த்து முழுகினர். அவன் ஒழிந்த மகிழ்ச்சிப்பூரிப்பால் புத்தாடைபுனைந்தனர். இவற்றையெல்லாம் செய்துகொண்டு தங்களுக்கு விடுதலையளித்த கோகுலத் தலைவனை நன்றிப்பெருக்கோடு வணங்கித் துதித்தனர்.

இதுதான் உண்மைத் தீபாவளி நீங்கள் இன்று கொண்டாடும் திருநாள். துன்பத்தினின்று தங்களை விடுவித்த பரமாத்மாவை வணங்க வேண்டிய புனிதநாள் துன்பத்தினின்று விடுதலை அடைந்ததையிட்டு மகிழ்ச்சிப் பூரிப்பால் உளம் பூரிப்படைந்து எல்லா உயிர்கள் மேலும் அன்பு பொழிய வேண்டிய ஒரு தினம்.

## இப்புனித தினத்தில்

இத்தகைய புனித தினத்தில் நாம் மதுவையும், மாமிசத்தையும் ஆடம்பரமான ஆடையலங்காரங்களையும் நாடலாமா? நாளும் பொழுதுமாக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துச் சிறுகச் சிறுகச் சேமித்துவைத்த பணத்தை மது, மாமிசம், பட்டாசு, ஆடம்பரஆடைகள், சினிமா போன்ற இன்னோரன்ன இப்புனித நாளில் வேண்டாத தேவைகளுக்கு வாரியிறைப்பதை நாம் இனிமேல் வரும் காலச் சந்ததியினரின் நல்வாழ்வுக்காக, நம் குழந்தைகளை நல்வழிப்படுத்த, நீக்கிவிடுவதெனத் திடசங்கற்பம் பூணவேண்டும் இது மட்டுமன்றித் தீபாவளியின் மேற்படித் தத்துவத்தை உணர்ந்து இறைவன் அருளின் வலுவை ஏற்பட இத்தெய்வீகத் திருநாளில் சில மணி நேரமாவது இறை வழிபாட்டில் ஈடுபடவேண்டும். எத்தனைதான் நாம் விஞ்ஞானத்தின் சிகரத்தை யாம் முன்னேறினாலும்

[4-ம் பக்கம் பார்க்க]

# தீபாவளித் திருநாள்

— கொற்றை பி. கிருஷ்ணானந்தன் —

தீபாவளியென்ற பே தினின் என்றனின்
சிந்தை குளிருதம்மா! — என்று
நாவாலே சொலிய நாநில மாந்தர்கள்
நன்றி செலுத்துகின்ற — உயர்
தேவாதி தேவனாய் விஷ்ணு அசுரனைக்
கொன்ற தினமிதுவாம் — இதைப்
பாவாலே சொல்ல முடியவில்லையெங்கள்
பாங்கு தமிழினிலே!

சேலைக் கடைகளிற் சென்று துணிகளைச்
சீருற வாங்கி வந்து — அதை
நாலு தோழிகட்கும் காட்டி மகிழ்ந்திடும்
நாட்டு வனிதையரும் — நல்ல
பாலை நிகர்த்த முகம்படைத்த தங்கள்
மனைவியைப் பார்ப்பதற்கு — தம்
வேலை தலத்திலவ் லீவுபோய் டேயுடன்
விரைந்திடும் ஆடவரும் ...

"சடசட சடசட டோடுமிக் டோடும்"
சத்தங்கள் யாங்கணுமே — நல்ல
பட்டாசு வாணம் வெடித்து முடிக்கெனைப்
பதற வைக்கும் பாலரும் — இட்டத்
தட்ட அறுபதைத் தாண்டிய கிழவரும்
கிழவியும் சேர்ந்திருந்தே — இங்கு
கட்டுக் கடங்கா மகிழ்ச்சியி லூறிக்
களித்திடும் நாளிதுவே!

பற்பல வண்ணமாய்ப் பாங்குற சட்டைகள்
பலரும் அணிந்திடு வார் — உயர்
கற்புறு மங்கையர் கணவனுடன் சேர்ந்து
கண்ணனைப் போற்றிடுவார் — நல்ல
சொற்பெருக் காளரும் மேடையி லேஇதைச்
சொல்லி மகிழ்ந்திடுவார் — இந்த
நற்றிரு நாளினை நெஞ்சம் குளிர்ந்திட
நாமும் புகழ்ந்திடுவோம்!

# 'தாழ்வுமனப்பான்மையை கைவிடுவது நல்லது'

## ஹரிஜன யூனியன் தீபாவளிச் செய்தி

அன்றைய நரகாசுரன் புரிந்ததாகக் கூறப்படும் அக்கிரமங்களைவிட இன்றைய நரகாசுரர்களின் கொடுமைகளை நினைத்தாலே நெஞ்சு பொறுக்காது. தற்கால நரகாசுரர்களால் பெரும்பாலும் பாதிக்கப்படுவது ஹரிஜனத் தமிழ் மக்களே. இம்மக்களின் வாழ்வில் ஒளிபிறக்கச் செய்வதற்கு இப்பொன்னாளில் திடசங்கற்பம் கொள்வோமாக.

இலங்கை ஹரிஜன யூனியன் பொதுச்செயலாளர் திரு எஸ். சுந்தரராஜ, வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இத்திருநாளின் உண்மைத்தத்துவ ஆதாரம் எதுவாயினும்! சுயநலப்பேராசை அழுதழுது பிடுங்குகின்றது ஒருபுறம், தானெனும் அகந்தை அட்டூழியம் செய்கின்றது மறுபுறம் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும் பேதமைத் தனம் வேதனை செய்கின்றது பிரிதோர் புறம்.

பாதிக்கப்பட்டிருப்போர் கண்ணுங்கருத்துடன் விழிப்போடு தீவிர முயற்சி செய்தால், வெகு விரைவில் சமுதாய பொதுவாழ்வுப் பாதையில் ஏறுநடை போடமுடியும்.

தம்மைத் தள்ளி அலைக்கழிக்கும் சீர்கேடுகளை கிள்ளி எறியவேண்டும், தாழ்வு மனப்பான்மையைக் கைவிடுவது நல்லது. தமது தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியை தாமே வைத்துக் கொள்ளாதோரின் வாழ்வு அடுப்படியிலிருந்து அரசியல் வரை அந்தரமே! இதனால் சகல சமுதாயப் பீடைகளுக்கும் உள்ளாகி ஏங்கி ஏங்கிச் சாவதற்கு நாமே பொறுப்பாளர்? அத்தகையவைகளை முற்றாக ஒழிக்கவேண்டும். தீபாவளித் திருநாள் வருடா வருடம் நமக்கு போதிக்கும் பாடமுமிதுவே யாகும்.

ஆகவே தீபாலங்கார வரிசைத் திருவொளி, திமைகளை மாய்க்கும், தெய்வீக ஒளியான பெருநாளாம், அருந்தமிழரின் திருநாளாகிய இந்நந்நாளில் அன்பும் அறனும் தழைத்தோங்கவேண்டும் இன்பம் எல்லாம் வாழ்வில் துலங்கட்டுமென. இலங்கை ஹரிஜன யூனியன், தனது தீபாவளி வாழ்த்தை மட்டிலாமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றது.

அன்பர்கள் - ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
சிப்சைட்
(வட இலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)
186-188 கே. கே. எஸ். றோட் — யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
சிவானந்தாஸ்
(பிரபல புடவை மாளிகை)
16, பெரியகடை யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மைத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதை மனதிற்கொண்டு இன்று செயல் படவேண்டும்.

### உயிரினங்கள் பங்குகொள்ள வேண்டும்

மேலும் மனிதர்கள் நாம் அந்நரகாசுரனிடம் இருந்து தம் உயிருக்குப் போராடி இறையருளால் தம்மை விடுதலையாக்கிக் கொண்டனர்கள். இதைப் பிரதிபலிக்கும் இந்நந்நாளில் ஆடு, மாடு, கோழி போன்ற பிராணிகளுக்கு நாம் நரகாசுரர்களாக மாறலாமா? இவற்றிற்கும் இன்று உயிர்ப் பிச்சையளித்து அவையும் நம் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள அனுமதிக்கவேண்டும். மகிழ்ச்சியைப்பெருக்க உலகத்தில் ஒரேஒரு வழி நாம் பெற்ற இன்பத்தை மன்னுயிர்கள்யாவற்றுக்கும் பகிர்ந்து கொடுப்பதே யாகும். ஆகவே இனிமேல் தீபாவளித் திருநாளில் மது, மாமிசம், ஆடம்பர அலங்காரங்கள் ஆகியவற்றை விடுத்து சிக்கனமாக மற்றைய பண்டிகைகள்போன்று இதையும் புனிதமாகவும் இறைவழிபாட்டோடும் கொண்டாடி மகிழ்வதென நாம் இன்று உறுதி பூணவேண்டும். இத்தகைய உறுதி உள்ளத்தில் தோன்ற விடுதலைவெற்றியைக் குறிக்கும் இந் நந்நாளில் மற்றும் எத்தனையோ சிக்கல்களில் இருந்து நாம் விடுபட்டு இன்பமாக வாழவழிபிறக்கும்.

—கே. ஜி.

# நூல் சே...

## தீபாவளிக் கதை

கீழ்வானம் இருண்டு மழையும் சிறிது தூறிக் கொண்டிருந்தது. ஏதோ அவசரம் அவசரமாய் சேலைத்தலைப்பில் சாவியை முடிந்துகொண்டு படியிறங்கி வீதியில் நடந்து சென்றுள் கோமளம். அவளுடன் சின்னப்பிள்ளை மாமியும் சாந்தியும்மாவும் காணப்பட்டனர். வீதிமுனையால் திரும்பிவந்த 'டக்ஸியை' மறித்து ஏறிக்கொண்டு அவர்கள் 'ஸ்ரீமதி' வாசலில் வந்திறங்கும் போது மணி இரண்டாகி விட்டது.

மூவரும் அங்கேயோய்ச் சேருவதற்கும் பங்களாவின் கதவு திறக்கப்படுவதற்கும் சரியாக இருந்தது.

'வாருங்கள்! வாருங்கள்!' சின்னத்தங்கம் மாமி அன்போடு வரவேற்றுள் அவர்களை.

'நேற்று உங்கள் வீட்டு வேலைக்காரி புடவைகள் எல்லாம் வாங்கி வந்துவிட்டதாகக் கூறினுள். இன்றைக்கு ராத்திரி நீங்கள் ஊருக்குப் புறப்படுவதாகவேதே சொன்னுள். அதற்குள் புடவைகளைப்பார்க்க வேண்டுமென்று தான் வந்தோம். அப்புறம் ராத்திரி ஸ்ரேசனுக்கு வர முடியுமோ இல்லையோ?' என்று தங்களது வருகைக்கு முற்றுரைமொழிந்தாள் சின்னப்பிள்ளை மாமி.

சின்னப்பிள்ளை எப்போதும் களங்கமற்ற குழந்தை உள்ளம் உடையவளாக இருந்தாள் மனதில் ஒன்றும் வைத்திருக்கமாட்டாள் பட்டென்று பேசித் தீர்த்துவிடுவாள். 'எங்களுக்கு வீட்டில் வேலைகள் குறைவு அதனால் இப்படி வந்தாற்போல உங்கள் அணிமணிகளையும் பார்க்க வந்தோம்' என்றுஅவள் கூறியதுமற்றைய இருவருக்கும் அவ்வளவாய்ப் பிடிக்கவில்லை.

'ஓ, அதுதானென்ன? அனுஸா புடவைகளைக் கொண்டுவந்து காண்பி' என்று கூறிவிட்டு உள்ளே சென்றுள் பவானி மாமி, விரித்த பாயின்மேல் பிரித்துப்போட்ட புடவைகளை தெரிவதில் ஈடுபட்டனர் கோமளம், சின்னப்பிள்ளை, சாந்தம் மூவரும்.

'இந்த நீல நைலெக்ஸ் சாறி நன்றுய் இருக்குக. இதுதானே அனுஸாவுக்கு ஒருவேளை தலைத் தீபாவளிப் புடவையாய் இருக்குமோ?'

'ஏன் இந்த ரோசா நிறத்திற்கு மட்டும் என்னகுறைச்சல்! இது அனுஸாவை புது வீட்டுக்குஅழைத்துப்போகக் கூடும்'

சின்னப்பிள்ளையின் பரிகாசத்தால் முகம்வெளுத்துத் தலைகுனிந்தாள் அனுஸா.

இதற்குள் அருகில் இருந்த குருத்துப் பச்சை நூல் புடவையையெடுத்து 'கோமளம் இதுயாருக்கு? சமையற்காரிக்கா?... ஆனால் விலை நற்பத்தைந்து ரூபாய் போட்டிருக்கே' என்று இழுத்தபடி சொன்னுள்.

'உதுதான் அம்மாவுக்கு'- அனுஸாவின் கீச்சிட்டகுரல் மூவர் முகத்திலும் அதிசய அடையாளமிட்டது.

'வயலற்சாறி யாருக்காக்கும்' கோமளத்திற்கு அனுஸா ஏதாவது 'நக்கல்' அடிக்கிருளோ என்கின்ற சந்தேகம்.

'அது என் மாமியாருக்கு. அனுஸா பதிலை முடிக்குமுன் பவானிமாமி தேநீர்த் தட்டுடன் வந்தாள். வந்ததும் அவளை மொய்த்து சரமாரியாகக் கேள்விகள் கேட்கத் தொடங்கினர் பெண்கள் மூவரும்.

'மாமி! மாமி! என்ன உங்களுக்கு நூல் புடவையா?' என்றனர்.

'ஏன் அப்படி' அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் கேட்டுக்கொண்ட இந்தக் கேள்வியில் கதைபிறந்தது.

o o

இருபது வருடங்களுக்கு முன் சேந்திரன் அய்யா இன்று போல மோட்டார் சவாரியும் பெரிய பங்களா வாசமும் அனுபவித்தவரல்லர் அப்பொழுது ஒரு சாதாரண கிளாக்கர்தான். முதுகு முறிய வேலைசெய்து உழுது அறுவடை செய்து கொண்டுவந்த முன்னூறு ரூபாயில் அவரது பெற்றோருக்குக் கொடுத்து மிஞ்சியதைக்கொண்டுதான் சேந்திரனும் பவானியும் குடும்பம் நடத்தியாக வேண்டும். குடும்பம் ஏதோ ஒரு மாதிரியாக இழுபட்டுக்கொண்டு போயிற்று. பவானியும் கணவனின் முகம் கோணுமல் இங்கிதமாக நடந்து குடும்பத்தை நடாத்தி வந்தாள். கலியாணமாகி ஐந்து வருடங்கள் மட்டும் தகராறுகள் ஏதுமின்றி நடந்து வந்த குடும்பம் கடைசி ஐந்தாவது வருட ஆரம்பத்தில் சேந்திரனின் தாயார் தான் பாட்டியாகப் போகும் செய்தி அறிந்து தாயில்லாப் பிள்ளையான தன் மருமகளை பரிந்து பார்க்க ஆவலுடன் வந்தாள்.

அப்போது திருவிழாக் காலம். சேந்திரன்தன் நண்பர்கள் சிலர் வீட்டிற்கு பவானியையும் கூட்டிச் செல்லலாமென நினைத்தார் தினமொருவர் வீட்டிற்கு விஜயம் செய்வதென்று திட்டமிடப்பட்டது பவானி பவுடர் வாங்கச் சென்ற வீட்டிலேயே "ரேகா" என்ற பெண் வந்திருந்தாள்.

சந்தித்த அதுதான் முதற் தடவை. அப்போதே அவர்கள் சரளமாகப் பழகலாயினர். ரேகாவின் அழகிய எடுப்பான தோற்றத்திற்கேற்ற அந்தப் பட்டுநிற பச்சைச் சேலையில் பவானி மயங்கிவிட்டாள்

மறுதினம், முதல்நாள் கட்டிய கத்தரிப்பூ நிறச் சேலையையே பவானிகழுவி உதறி உடுத்திக்கொண்டு புறப்பட்டாள் அன்றைக்கும் ரேகாவை சந்திக்க நேரிடும் என்று சற்றேனும் அவள் எண்ணியிருக்கவில்லை. அன்று ரேகா கட்டியிருந்த அப்பிள் கலரில் கறுத்த போடரும், அதனை அழகுறுத்தும் மற்றைய வர்ணங்களும் கண்ணைப்பறித்தன.

மூன்ருவதுநாள் சலவை மினுக்கம் கண்டறியாத தனது மணிப்பரியை எடுத்து உடுத்திக்கொண்டாள். அப்பொழுது அவளை அறியாமலே ஒரு நெடுமூச்சு எழுந்தது. "ரேகா அணிந்திருந்த சேலை என்ன அழகு' எத்தனை எடுப்பு..."

நவராத்திரி விழாவன்று ரேகாவின் அன்புக் கட்டளையை மீறமாட்டாமல் ஒருதினம் அவள்வீட்டிற்குச் சென்றுள் பவானி. அன்றைக்கே விஷவிருட்சத்திற்கு வித்திட்டாயிற்று பவானி போயிருந்த சமயமாக ரேகாவின் வாடிக்கைப் புடவைக்காரன் தீபாவளிப் பண்டிகைக்கான பலரகப் புடவைகளுடன் அங்கு சென்றுள்.

அவள் தனது மனதை எவ்வளவோ முயன்றும் அடக்க முடியாத ஆசையே தலைதூக்கி நின்றது. கட்டுமீறிய ஆசை கண்களில் கட்டமிட எட்டிஎடுத்தாள் பொன்னிறத்திருச் சேலையொன்றை அதன் விலை... இருநூற்று ஐம்பது ரூபாய்!

நிலையுணர்ந்த புடவைக்காரன் "எடுங்க அம்மணி, நம்மகிட்ட புடவை எடுக்கிற பாக்கியம் ராஜா மாதிரி மகன் பிறப்பான்" என்று சாதுர்யமாகப்பேசி சேலையின் முந்தானைப்பக்கத்தை விரித்துப் போட்டான். மின்சார மேக்குரி விளக்கின் ஒளியில் புடவை பவானியின் கண்களில் பளிச்சென மின்னி இதயவீணையை மீட்டிற்று.

"அட... பவானிக்கு நல்ல பொருத்தமடி" ரேகா அவள் தோளருகே சேலையை மடித்து வைத்துப் பிடித்தாள். ஆசை வழியிட்டது முகத்தில்.

பட்டுப்புடவையில் ஆசை மட்டும்இருந்தாற்போதுமா? அதைவாங்குவதற்கு அவ்வளவு பணமும் அல்லவா வேண்டும். பவானியின் உள்ளத்தில் [illegible] நினைவுகள் அவளை வீட்டுக்குத்திருப்பிவிட்டன. வீடு வந்ததும் தன் கணவனிடம் தனக்குப் பொருத்தமான அந்த சேலையைப் பற்றிக் கூறினுள். "ரேகா கூடசேலை எனக்கு மிக நல்ல பொருத்

அன்பர்களுக்கும்—ஆதரவாளர்களுக்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
ஹரன் ஜுவலர்ஸ்
(பிரபல நகை வியாபாரிகள்)
(R. G. பில்டிங்)
50, கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
விக்னேஸ்வரா
புடவை மாளிகை
பஸ் நிலையம் முன், யாழ்ப்பாணம்.



எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
புத்துணர்ச்சிக்கும்
உற்சாகத்திற்கும்
அண்ணு
கோப்பி
அண்ணு இண்டஸ்றி
இணுவில்.




அன்பர்களுக்கும் - ஆதரவாளர்களுக்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
இலங்கை ஆயுள்வேத
கூட்டுத்தாபனத் தயாரிப்புகள்
ஆசவங்கள் — அரிஷ்டங்கள்
லேகியங்கள்—சூறணங்கள்—மருந்துச்சரக்குகள்
மேற்படி கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.
ஜண்டு பாமஸி
[ZANDU PHARMACY - BOMBAY]
ஆசவங்கள் — அரிஷ்டங்கள்
லேகியங்கள் — சூறணங்கள் — பஸ்பங்கள்
மற்றும்
பிரபல ஆயுள்வேத வைத்தியர்கள், பாமஸிகள் தயாரிக்கும்
மருந்துகள் — குளிகை வகைகள்
சூறணங்கள் — தைலங்கள்
மற்றும்
குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, தைலங்கள் என பலவகைகள் மருந்துச்சரக்குகள் எப்பொழுதும் மலிவாகக் கிடைக்கும்.
எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்)
53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 541 Residence: 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 35825

யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான
V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் தமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.
V. K. இராசரத்தினம்
பிரபல
றேடியோ விற்பனையாளர்களும், திருத்துனர்களும்
95, ஸ்ரான்லி றோட் : யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்து
ஈஸ்வர் கோப்பறேசன்
அன்
றேடியோனிக்
பிரபல றேடியோ உப-உறுப்பு
இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்)
18, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.
போன்: 7308

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
நீடித்த
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாதது
யூ ஆசா
பற்றறிகளே





வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
ஸ்ரான்லி றோட் — யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
அஜந்தாஸ்
பிடவை மாளிகை
162, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
கிளைகள்:-



புஸ்பராணி ஸ்ரோர்ஸ்
பரமேசுவரவீதி—யாழ்ப்பாணம்;
அஜந்தா ரெக்ஸ் பிரின்டேர்ஸ்
(பிடவை அச்சிடுபவர்கள்)
162 B, கே. கே. எஸ். றோட் — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சேலை

...மைரகப் ... அங்கு ... மனதை எவ் ...ளும் அடக்க ...சயே தலை ... கட்டுமீறிய ... கட்டமிட ... பொன் ...லைபொன்றை ... இருநூற்று ...! ... புடவைக் ... அம்மணி, ...டவை எடுத் ... ராஜா பிறப்பான்'' ...மாகப்பேசி ...லைப்பை ...றிப் போக ... மேக்குரி ...யில் புடவை ...களில் பளிச் ... வி னவை ...னிக்கு நல்ல ...' ரோஅவன் சேலையை ...த்துப் பிடித் ...விட்டது ...வியின் ஆசை ...க்கோதுமா? ...ற்கு அவ் ... அன்னை ...பவானியின் ...லையாய்ந் ... வீட்டு ...டன. வீடு ... கணவனிடம் ...பொருத்தமான ...யைப் பற்றிக் ...கா கூடசேலை ...ல பொருத்...

தமாயிருக்கு'' என்றுகூறிய தாக பவானி கதை அளந்த போது.

''அது உனக்குப்பொருத்த மாயிருக்கு சரி பவானி. ஆனால் நம்ம குடும்ப பொரு ளாதாரத் திற்கு மங்களா பொருந்த வேண்டும்.'' என்று கூறிக்கொட்டவிட் டார்.

பவானிக்கு உள்ளூர எரிச் சல்தான் மூண்டது அவள் மனக் குமுறலுக்கு கணவ னின் அன்பு அணைபோட்டது அப்படியிருந்தும் சில வார்த் தைகளை உதிர்த்து விட் டாள்.

தீபாவளி நெருங்கிவந் தது. கேந்திரன் வாங்கிய நூல் புடவையை விரை லும் தொடேன் என்று பவானி தீர்க்கமாகக் கூறி விட்டாள். அவளது வாடிய முகம் மெலிந்தவுடல் ஏக் கம் நிறைந்த கண்கள்- இவை கேந்திரனைக் கலங் கச் செய்தன.

அந்தக்கணமே கேந்திரன் நிம்மதியிழந்தான். மனைவி யின் ஆசையை நிறை வேற்ற முடியாத தனது நிலைமையை எண்ணி மனம் நொந்தான்.

காலை எட்டு மணியிருக்கும் வீட்டை விட்டுப் புறப்பட் டான் கேந்திரன். மன உளைச்சலுடன் கடைசியில் தூரம் தாங்க முடியாமல் மூலையில் சோர்ந்து சுருண்டு படுத்திருந்தாள் பவானி.

மாலை ஏழு மணி அடித் தது சுவரிக் கடிகாரம். பவானி அப்பொழுதுதான் துயில் மறந்து கண்விழித் தாள். பிடிவாதமாக அன்று முழுவதும் உண்ணாவிரத மிருந்த களைப்பு கண்களைச் செருகியது. திடீரென ஒரு கவலை. காரியாலயத் திலிருந்து கேந்திரன் இன் னமும் வரவில்லை. முகத் தைக் கழுவி நெற்றியில் நீறணிந்து விளக்கேற்றினாள் பவானி. மணி எட்டு ஒன் பது பத்து கேந்திரன் வர வில்லை. இனந்தெரியாத பயம் அவளிடம்குடிகொண் டது.

'அம்மா அவர் இன்னமும் வரவில்லையா?'

'இல்லை பவானி'

'வேலை முடிந்ததும் தின மும் வீட்டிற்கு வேளைக்கே வருபவர் இன்று இத்தனை

**கோ. தர்மகுலசிங்கம்**

நேரமாகியும் வரவில்லையே. எனக்குக் கவலையாக இருக் கிறது.

கவலை வேண்டாம் அம்மா அவனென்ன குழந்தையா? தானாக வருவான்தானே. நீ ஏன் பயப்படுகிறாய்! என்று சமாதானம் கூறி னாள் மாமியார்.

நடுநிசியைக் காட்ட சுவர் கடிகாரம் டிங்-டிங்-டிங் என பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தது. கேந்தி ரன் வரவில்லை. எங்கும் ஒரே அமைதி சூழ்ந்திருந் தது. இரண்டாம் காட்சி சினிமா பார்த்துவிட்டுச் சென்ற ஒருவன் 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்ற பாட் டின் அடியைப் பாடிக் கொண்டு போனான் அதைக் கேட்டபோது பவானிக்கு உடல் நடுங்கியது. அப்படி யும் இருக்குமோ?

கேந்திரன் [illegible]ளுக்குப் பயந்து தொல்லைகள் தாங் காது அமைதி தேடி எங்கே னும்புறப்பட்டு விட்டானோ? இனி அவள் கதி. பல ஆச் சரிய நினைவுகள் அவள் நிலையை மேலும் அவலப் படுத்தின.

பளிச்சான பட்டுக்குத் திட்டமிட்டாள் அவள் சாதா ரண கைத்தறியே தகுதி யென்றார் கணவன். துரு வங்கள் பிரிந்தன. பவானி யின் கண்கள் தன்னையும் அறியாது மஞ்சள் சரட் டைப்பற்றியது. நூலும் பட்டும். இரண்டுமே வேண் டாம். இந்தப் புனித மஞ் சள் நூலே போதும். அதுவே பிணைப்பின் நிரந்தரச் சின் னம். நாவிழைகளில் ஆரம் பித்த பிரச்னை நூலிழை களில் அவளது எதிர்கால த்தை ஊசலாடச் செய்தது.

'தேவி! அவருடைய நிரந் தர அன்பையும் மாங்கல்ய பலத்தையும் கொடுத்து காப்பாற்று' என்று உருக்க மாகப் பிரார்த்தனை செய்த வாறே வாயிற்புற மன்ன லுடன் ஐக்கியமானாள் பவானி. தூரத்தே வரும் ஒவ்வொரு கற்பனை உருவ மும் அவளை ஏமாறச்செய் தது. எங்கோ மணி நாலு அடித்தது.

பவானி வா அம்மா! பொறுப்பில்லாதவன்எங்கா வது உலாத்திவிட்டு வரு வான் தானே, என்று சமா தானம் செய்தாள் மாமி யார். பவானியின் மனமோ உடைந்த அணையாயிற்று.

அம்மா என்று ஓலமிட்ட வாறே மாமியார் மடியில் சாய்ந்தாள் பவானி அவள் வடித்த கண்ணீரில் அன்பு கரைந்திருந்தது.

மேற்குப்புறக் கதவு இடிக் கும் சத்தம் கேட்டபோது துள்ளியோடினர் இருவரும். குளிரில் நடுங்கியபடி நுழை ந்த கேந்திரனின் காலடி யில் வீழ்ந்தாள் பவானி.

எட மூதேவி இவ்வளவு நேரமும் எங்கே போனாய் இருக்கிறவர்களைப்பரிதவிக்க விட்டு என்ற குரலில் கண் டிப்பு, பாசம் உரிமை மூன் றும் கலந்து வந்தன.

பவானி என்னை மன்னித் துக்கொள். பட்டு புடவை வாங்கத்தான் போனேன். முடியவில்லை.

'என்ன புடவையா? புடவை வேண்டும். நீங்கள் தான் வேண்டாம். உங்கள் அன்புதான் வேண்டும்' என்று விம்மி வெடித்து கண்ணீர் மல்க மாங்கலி யத்தை இறுகப்பற்றிக் கண வன் மேல் சாய்ந்தாள்

கணவன் தொடர்ந்தான்; 'புடவைக்காகப் பணத்திற் கும் பலவிடங்கள் அலைந்து சோர்ந்த சமயந்தான் முன் னர் என்னிடம் கடன் வாங் கிய ராஜனின் நினைவுவந் தது. எதிர்பாராத வியப் பில் உன்னை ஆழ்த்த எண்ணி யாழ்ப்பாணப் பட்டணம் சென் றேன். இறு தாமதத்தால் நேரமாகிப் பணம் கிடைத் தும் புடவை இல்லையென் றாகிவிட்டது.' - கேந்திரன் கூறுகையில் பவானியின் நா தழுதழுக்க யாதொன் றும் பேசமாட்டாதவளாய் கண்ணீர் சொரிந்தாள்.

முன்பு அவன் வாங்கிய நூல்புடவையை உடுத்துத் தெய்வத்தை வணங்கியது போல் அவளின் உள்ளம் அமைதி ஒளி வீசியது.

கதையைக் கூறிமுடித்த பவானி 'கோமளம் அன் றைய தினத்திலிருந்து நான் நூல்ப்புடவைதான் வாங்கிக் கட்டுவேன். வாழ் க்கை நிலை மாறி செல்வந்த ரான போதும் மூத்தின அன்பு வாழ்க்கையின் ஒரு ஞாபகார்த்தம். நினைவுச் சின்னம்தான் இந்த நூல் புடவை

எத்தனை பட்டுப் புடவை கள் பல சந்தர்ப்பங்களில் வாங்குகின்றேன். தீபா வளிக்கு வாங்கியிருக்கிறதா அவற்றிற்கும் பெருமை! ஆனாலும் இந்த நூல் பச்சை தான் எனக்கு. எப்படி நன் றாயிருக்கா? ஐம்பது ரூபாய் தான் விலை''-சாந்தம் மாமி சொன்னாள்.

ஆம்! புடவை விலை ஐம் பது ரூபாய்தான். ஆனால் அதனூடே பின்னியிருக் கும் வரலாறு பதிவுக்கு குடும்பப் பொறுப்புணர்ச்சி கணவனின் அன்பு— எவ் வளவுச்செல்வம்! அவற்று க்கு விலை ஏது?

—

சுழிபுரம், ஞாயிறு மூளாய் பகுதியில் ஒரே யொரு கத்தோலிக்க தேவா லயமாக விளங்கும் புனித செபமாலைமாதா ஆலய திரு விழா கடந்தவாரம் ஆரம்ப மாகியது.

சில்லாலை மீசாலைச் சேர் ந்த கட்டுவேக்குரவர் வண எம். ஈ. பயஸ் ஆராதனை களை நடாத்தி வருகின்றார். தினமும் காலையில் பூசைபலி யும் மாலையில் ஆராதனை யும் நடைபெற்றுவருகிறது. வருகிற ஞாயிற்றுக்கிழமை காலைப்பூசைப் பலியைத் தொடர்ந்து கரும சுற்றுப் பிரகாரத்துடன் விழாமுடி வடையும்.


வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!

நைலெக்ஸ் சாறிகள்—கைத்தறி சேலைகள்

பட்டு வேட்டி, சால்வைகள்

மற்றும் சகலவிதமான

ஜவுளித் தினிசுகளுக்கும்

ரவி ரெக்ஸ்ரைல்ஸ்

கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

சாரதாஸ்

புடவை மாளிகை

27/3 மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது உளங்கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்!

S. R. S.

ஜவுளி மாளிகை

அன்

நெசவு நிலையம்

காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்

போன்: 296



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த

தீபாவளி வாழ்த்துக்கள்!

செ. காசிப்பிள்ளை அன் கோ.,

(பிரபல புடவை வியாபாரிகள்)

82, கே. கே. எஸ், ரோட் — யாழ்ப்பாணம்;

கிளை; சி. கே. பி. 74/8 பெரியகடை, யாழ்ப்பாணம்.

...த்துக்கள்! ...ரும் ...ம் ... ...வருக்கும் ...த் து ...சன் ...ர்களும்) ...பாணம். ...த்துக்கள்!



...ஸ் ...டோர்ஸ் ...ப்பாணம்.




குளிர்மையான, மென்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோரன்

CTC சிலோன் டோபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையிலிருந்து இந்தியா முதலில் விலகிச்செல்லட்டும்

## யாஹ்யாக்கான் நிபந்தனை

புதுடில்லி, அக். 17

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையிலுள்ள எல்லைப்பகுதிகளில் குவித்துவைத்துள்ள தனது படைகளை இந்தியா முதலில் விலக்கிக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாக்கான் கூறியிருக்கிறார்.

ஈரான் 2500வது ஆண்டு நிறைவுவிழாவிற்கு சென்றிருந்த அதிபர் யாஹ்யாக்கான் அங்கு தம்மைச் சந்தித்த சோவியத் அதிபர் பொட்கோர்னியிடம் இப்படி தெரிவித்திருப்பதாக ஈரான் வானொலி அறிவித்தது. எல்லைப் பகுதியில் குவித்து வைத்துள்ள படைகளை இந்தியா முதலில் விலக்கிக் கொண்டால் பாகிஸ்தானும் தன் படைகளை அப்புறப்படுத்திக்கொள்ளத் தயாராய் இருக்கிறதென்று அதிபர் யாஹ்யாக்கான் தெரிவித்தாராம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் அமைதிக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை தோன்றியிருப்பது குறித்து சோவியத் அதிபர் திரு. நிக்கோலாய் பொட்கோர்னி அதிபர் யாஹ்யாக்கானிடம் கவலை தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான எல்லைப் பதற்றநிலைமை இருந்துவருவதற்கு பாகிஸ்தான் தான் காரணம் என்று சோவியத் செய்தி ஏடான பிராவ்டா கூறியிருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையில் மாமூல் நிலைமை உருவாவதை கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள ராணுவ அதிகாரிகள் கெடுத்து வருகிறார்கள் என்று பிராவ்டா தெரிவித்துள்ளது.

இந்தியாவில் திரிப்புரா எல்லையில் கரீம்கஞ்ச் என்ற இடத்தில் நேற்று கண்ணி வெடியொன்று வெடித்ததின் காரணமாக இருவர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களால் இந்தக் கண்ணி வெடிகள் வைக்கப்பட்டிருந்ததாக அதிகாரிகள் கூறினார்கள்.

இந்திய-பாக் எல்லையில் பாகிஸ்தான் அதிகாரிகள் தொடர்ந்தும் ராணுவத்தைக் குவித்துவருவதாக புதுடில்லிக்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

### வங்க தேச பிரச்னைபற்றி பிரி. தூதர்

புதுடில்லி, அக். 17

வங்காளதேச பிரச்னை ஒரு அரசுக்கும் ஒருபகுதி மக்களுக்குமிடையில் நடைபெறும் உள்நாட்டுப்பிரச்னை என்று புதுடில்லியிலுள்ள பிரிட்டிஷ் தூதர் கல்கத்தாவில் கூறினார் இப்பிரச்னையைப் பேச்சுவார்த்தைகள் மூலமன்றி வன்முறையால் தீர்க்கமுடியாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

### ஆதாரமில்லை

இந்திய போர்விமானங்கள் கிழக்குப்பாகிஸ்தானில் சில பகுதிகளில் தாழ்வாகப் பறந்து தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் அதிகாரிகள் வெளியிட்ட குற்றச்சாட்டுக்களை இந்திய அதிகாரிகள் ஆதாரமற்றது என மறுத்துள்ளனர்.

......

### கோரிக்கை

ஊரதீவு, ஞாயிறு

காரைநகர் தெற்குக் கிராமசபைப் பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்க நிதி தந்துதவுமாறு மேற்படி கிராமசபை, விளையாட்டுத்துறை ஆய்சிமன்றவிவகார அமைச்சர் திரு. கே. பி. இரத்தினாயக்காவைக் கேட்டுள்ளது.

## டாக்டர் கீஸிங்கர் பீகிங் புறப்பட்டார்

வாஷிங்டன், அக் 17

அமெரிக்க அதிபர் நிக்ஸனின் பிரதம ஆலோசகர் டாக்டர் கீஸிங்கர் மீண்டும் சீனாவுக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்.

வாஷிங்டனிலிருந்து புறப்பட்டுள்ள டாக்டர் கீஸிங்கர் புதனன்று பீகிங்கில் இருப்பார்

அடுத்தவருடம் மேமாதம் அளவில் அதிபர் நிக்ஸன் பீகிங் செல்லவிருப்பதால் அந்தப்பயணம் சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக டாக்டர் கீஸிங்கர் அங்கு செல்கிறார். டாக்டர் கீஸிங்கர் பீகிங்கில் தங்கியிருக்கும் நாட்களில், அதிபர் நிக்ஸன் சீனாவில் எங்கெங்கு விஜயம் செய்வார், யார் யாரைச்சந்திப்பார், என்னென்ன விஷயங்களைப் பற்றி விவாதிப்பார் என்பனபற்றி முடிவெடுப்பார் என்று தெரிகிறது. இதுபற்றி அதிபர் கீஸிங்கர் பிரதம மந்திரி சூ என் லாயுடன் ஆலோசனைகள் நடத்துவார். சமீபத்தில் டாக்டர் கீஸிங்கர் ஆசியநாடுகளுக்கு விஜயம் செய்தபொழுது பீகிங்கிற்கும் இரகசியமாகச் சென்று அதிபர் நிக்ஸனின் சீனவிஜயத்துக்கான ஏற்பாட்டை செய்தார் என்பது தெரிந்ததே.

——

### திருட்டு

பருத்தித்துறை ஞாயிறு

கரவெட்டி கிழக்குப் பகுதியில் ஒருவருக்குச் சொந்தமான 100 செம்மறி ஆடுகளையும் வேறொருவருக்குச் சொந்தமான பத்துவாழைக் குலைகளையும் சிலர் திருடிக்கொண்டுபோய் இடைவழியில் இரண்டு செம்மறி ஆடுகளைத் தவிர்ந்த மற்றைய ஆடுகளை விட்டுச்சென்றுவிட்டதாக நெல்லியடிப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

### 214 கரிச்சுரங்கங்கள் தேசியமயம்

புதுடில்லி, அக். 17

214 நிலக்கரிச்சுரங்கங்களை இந்திய அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுவிட்டது. இந்தச் சுரங்கங்களில் 211 பீகார் மாகாணத்தில் இருக்கின்றன. 3 சுரங்கங்கள் மேற்கு வங்காளத்தில் இருக்கின்றன

......

### டாக்ஸி விபத்து ஒருவர் பலி

யாழ்ப்பாணம், இன்று

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் டாக்ஸி விபத்தில் சிக்கிய 60 வயதான வயோதிபர் ஸ்தலத்தில் மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய உத்தியோகப் பற்றற்ற மாஜிஸ்திரேட் திரு எஸ். நடராசா, டாக்ஸி சாரதியான ஞானப்பிரகாசம் ஆரோக்கியநாதனை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

டாக்ஸி சாரதி சார்பில் புரக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார். மாஜிஸ்திரேட் சாரதியை இம்மாதம் 21ம் தேதி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

......

### தினசரி ரூ. 10000 விற்பனை

பருத்தித்துறை ஞாயிறு

கட்டைவேலி கூட்டுறவு ஆரயபச்சங்கம் இவ்வாரம் வாங்கிய ரூபா இரண்டு லட்சம் பெறுமதியான புடவைகள் ஒரிருதினங்களில் முடிந்துவிடலாமெனத் தெரிகிறது. தீபாவளிக் காலமாகையால் தினசரி ரூ 10,000க்கு புடவைகள் விற்பனையாகியுள்ளதாகத் தெரிகிறது

வட அயர்லாந்துக்கு

## 3 தொன் ஆயுதங்களை விமானத்தில் கடத்தமுயற்சி

ஆம்ஸ்டர்டாம் அக் 17

விமானமொன்றில் கடத்திவரப்பட்ட சுமார்மூன்று தொன் நிறையுள்ள ஆயுதங்களை டச்சு பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

வட அயர்லாந்துக்குக் கொண்டுசெல்வதற்காக இவை தனிப்பட்டவர்களால் கடத்திவரப்பட்டிருப்பதாக பொலிசார் கூறினர்கள்.

தனிப்பட்ட கம்பெனியொன்றுக்கு சொந்தமான விமானமொன்றில் கொண்டுவரப்பட்ட இந்த ஆயுதங்கள் வடவியட்னமிலுள்ள பெல்பாஸ்ட் நகருக்கு கடத்திச்செல்லப்படவிருந்தனவாம். ஆயுதங்களைக் கடத்தியவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். ஐரிஷ்குடியரசைச் சேர்ந்த வேறு மூவரும் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் பெண்மணியும் ஒருவர்.

வடவியட்நாமில் லண்டன் டெரிநகரில் நேற்று காவல்படையினருக்கும் கலவரக்காரர்களுக்குமிடையில் நடந்த மோதலில் ஒரு பிரிட்டிஷ் சிப்பாய் கொல்லப்பட்டார். பெல்பாஸ்ட் நகரில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 3 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்

வடஅயர்லாந்தில் தொடர்ந்து பலநகரங்களில் கலவரக்காரர்களுக்கும் காவல்படையினருக்குமிடையில் மோதல்கள் நடைபெற்றவண்ணமிருக்கின்றன. ஓரிடத்தில் பஸ் ஒன்றைக் கடத்திச்சென்று கலவரக்காரர் எரித்துவிட்டார்கள்.


எல்லோருக்கும் எமது அன்புகலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

வடமாகாண விநியோகஸ்தர்கள்

எஸ்—லோன் - பி. வி. ஸி.
பைப்புகள்

மின்சார பல்புகள்
C. B. E.

எவறெடி
பற்றறிகள்

சென்ரிக் மின்சார
தண்ணீர் பம்புகள்

சகலவிதமான மின்சார உபகரணங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

ஸ்ரான்லி றேட், போன்: 7016 யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையின் முடிவு கண்ணியம்

— டி. என். கதி. சுப்பிரமணியம் —

அன்றாட வாழ்க்கையில் பிறருக்குவேண்டிய கடமைகளை நாம் செய்யவேண்டுமென்பது உண்மை. மறக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை. இதே போன்று எண்ணற்றவர்கள் தத்தம் கடமைகளையும் செய்து நமக்கு வேண்டிய கடமைகளையும் செய்வதால் நாம் உயிர் வாழுகிறோம். பிறர் செய்யத்தவறிய கடமைகள், நம்மை வந்து பாதிக்கும். நாம் செய்யத்தவறிய கடமைகள் பிறரைப் பாதிக்கும்.

காலையில் எழுந்ததும் பல் தேய்க்கிறோம். இந்நாளில் பற்பொடியும் பற்பசையும் லட்சோப லட்சம் மக்களுக்குத் தேவை, ஒவ்வொருவருடைய பல்லும் சுத்தமாக இருக்க மற்றவர்கள் பணி செய்தாக வேண்டும். கடமையைச் செய்தாக வேண்டும். இந்தப் பற்பொடி அல்லது பற்பசையைச் சார்ந்த தொழில்கள் பல இயங்குகின்றன. பிறருக்குரிய கடமையைச் செய்யத் தொடங்குவதால் நமக்குத் தொழிலும் வேலையும் கிடைக்கின்றன. திறமைகள் வளருகின்றன.

நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நாட்டின் தொழில் வளம், பணப் புழக்கம் கடமையிலிருந்து கிடைக்கின்றன. யாராவது ஒருவர் செய்யும் தவறு, அல்லது கவனமின்மை அல்லது ஒப்பேற்றுதல் ஒரு தொழிலுக்குத் தீமை தரலாம். நோயைப் பரப்பலாம். வீழ்ச்சி தரலாம். தன் கடமையைக் குறைத்துக் கொண்ட ஒருவனுல், ஒரு சிலரால் அந்தத் தொழிலில் திறமையுள்ளவர்களும் வேலையை இழப்பார்கள். முதலீடுகள் நட்டமடைகின்றன. எனவே கடமையை எவரும் எங்கேனும் சிறுகணம் மறப்பாரேயானுல், அந்த விநாடியே அந்தத் தொழிலுக்கு இறங்குமுகம் உண்டாகும்.

குழாய்த் தண்ணீரில் மீன் வந்தாலும், புழு பூச்சி வந்தாலும், குப்பிப் பாலில் பூச்சி இருந்தாலும் ஒருவரது கவனக்குறைவினுல் நிர்வாகம் முழுமைக்கும் ஏச்சு! சமயா சமயத்தில் ஆட்சி செய்வோருக்குத் திட்டு, நிலையைக் கவிழ்க்க, குறைபாடு நிறைந்த நிர்வாகங்களைத் தான் பற்றிக்கொள்ளுவார்கள். ஒருவன் செய்த மடமைத் தவறினால், எத்தனையோ ஆயிரம்பேர் பசி, வேலையிழப்புக்கு வழிகோலுதல் எத்தனை பெரிய அக்கிரமம்.

### தீமைகள் பரவுகின்றன

சரியான பற்பசை இல்லாத காரணத்தால் தீமைகள் எப்படிப் பரவுகின்றன. பற்பசைக் கலவையில் கவனக் குறைவு ஏற்படுவதால் ஒரு அரசியல்வாதி நியாயத்தை மறந்து பல்வலி காரணமாக அநியாயத்தை நம்புகிறான். மோட்டார் ஓட்டி ஒருவன் பல்வலியின் மீதுள்ள கவனத்தால் விபத்தை உண்டாக்குகிறான். படிக்கும் மாணவன் பல்வலி காரணத்தால் படிப்பை கோட்டை விடுகிறான். விஞ்ஞானியின் அறிவு பல்வலி காரணமாகத் தடைப்படுகிறது. சட்டம், நிர்வாகம், கல்வி, கலை எங்கணும் தேக்கம் உண்டாகலாம். பல்வலியின் காரணமாக ஒரு நாட்டின் வளர்ச்சி நாட்டின் போர்த்திறன் யாவும் குறைவுபட வழி இருக்கிறது. மனிதர்களின் பசி, தாகம், ருசி, ஜீர்ணம் யாவும் குறைவுபடும்போது, அந்த நாட்டின் கலைக்கும் கலாச்சாரத்திற்கும் கேடு பிறக்கிறது.

அற்பமான பற்பசையில் ஏற்படும் கோளாறு காரணமாக இத்தனை தொடர் நிகழ்ச்சிகள் பாதிக்கிறது என்றால் ஒருவரது கடமைக்கு எவ்வளவு உயிர்நாடி இருக்கிறது. வாழ்க்கையின் இன்பங்களை யெல்லாம் மாய்த்து விடுவதைக்கடமை தவறியதொன்றின் வழியாக உய்த்து உணரலாம்.

இது விளம்பர யுகம். எனவே உண்மையை மிகைப்படுத்திச் சொல்லலாம். சொன்னாலும் "சுத்தம் ஒன்றே" அந்தக் கம்பனிச் சரக்குக்குச் சோறுபோடும். ஒவ்வொருவரும் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சுகாதாரத்தில் கண்ணும் கருத்தும்மிக்க வியாபாரிகள் கலப்படம் செய்ய மாட்டார்கள். கலப்படத்தில் ஈடுபாடுகொண்டவர்கள் அற்பலாபத்தைவிட அதிக லாபம் சம்பாதிக்கலாம். நாளாவட்டத்தில் அவர்கள் பெயர் வீழ்ந்துவிடும். ஒவ்வொரு பொருளை வாங்கும் நமக்கும் அது கடமையுடன் செய்யப்பட்ட கண்ணியமான பொருளா என்று கட்டுப்பாட்டோடு பார்க்க ஆரம்பித்தால்? போச்சு! ஏமாற்றுக்காரர்களின் செய்கை. ஆனாவது கடமை தவறியவர்கள் தங்கள்பிழைப்பால், பிழைப்புக்கே உலை வைக்கிறார்கள்!

எனவே தனி மனிதர்கள் கடமைகள் என்னவென்று பார்க்கும்போது: தன்னைப் பொறுத்த சுத்தம் தன் வீட்டைப் பொறுத்த சுத்தம். தன் தெருவின் சுத்தம், நதிகள் ஓடைகள் நீர்த்தேக்கம் இவற்றின் சுத்தம். தொழிற்சாலைகளில் சுத்தம், வியாபார இடங்களில் சுத்தம் பொதுமக்கள் புழங்குமிடங்களில் சுத்தம். பொதுமக்கள் ஏறிச்செல்லும் வாகனங்களில் சுத்தம். பொதுமக்கள் பார்க்கும் சினிமா நாடகக் கொட்டகைகளில் சுத்தம், பொதுமக்கள் உண்ணும் உணவு விடுதிகளில் சுத்தம்.

மேலே சொன்ன இடங்களைப் போலவே மற்றைய இடங்களிலும் சுத்தமே சோறுபோடும். சோறு போடும் இடம் இன்னும் அதிக சுத்தமாக இருக்க வேண்டும். சூடான உணவு பரிமாறும் இடங்களில் நோய்க் கிருமிகள் வரா. டின் உணவுகள், டின் பழங்கள் அடைபடும் இடங்கள் மிகமிகச் சுத்தமாக இருக்க வேண்டும்.

### கடமைக்குள்ள கண்ணியம்

தொழில்துறை, நிர்வாகத்துறை, பாதுகாப்புத்துறை நிதித்துறை இவற்றுள் நாம் புகுந்து பார்த்தால் கடமைக்குள்ள கண்ணியம் என்னவென்று தெரியும். ஒருவரது கடமை, மற்றைய மக்களோடு எங்ஙனம் நாடி நரம்பு போல விரவிக் கிடக்கிறது என்னும் உண்மை புலனாகும். அன்றாடக் காரியங்கள் என்று அலட்சியப் படுத்தாமல் ஒவ்வொரு விநாடியும் கவனத்தோடு செய்ய வேண்டுவது கடமையாகும்.

நாம் செய்யும் ஒரு கடமையால் எத்தனை ஆயிரம் மக்கள் வாழ்வுக்கு மகிழ்ச்சி தருகிறோம். நோய் நீக்குகிறோம் என்று எண்ணிப்பார்த்தால் நமது சிறு கடமையின் மலையத்தனை அருமை தெரிய

(8-ம் பக்கம் பார்க்க)


எல்லோர்க்கும் எமது உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்



**நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ்**

(பிரபல இசைக் கருவி விற்பனையாளர்களும் பழுது பார்ப்பவர்களும்)

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எமது அன்புகலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



உங்களுக்குத் தேவையான எல்லாவிதமான

**"பேக்கின்ஸ்" உதிரிப்பாகங்கள்**

**"ஜோன்சன்ஸ்" உதிரிப்பாகங்கள்**

யாவும்

நிதானமான விலைகளில் எம்மிடம் கிடைக்கும்

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு தீரமான

★ **இரும்புச் சாமான்கள்**

★ **பெயின்ட் வகைகள்**

★ **அஸ்பெஸ்டஸ் சீற் வகைகள்**

★ **மர வகைகள்**

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

**விஷ்ணு ஹாட்வெயர் ஸ்ரோஸ்**

57, யாழ்ப்பாணம் வீதி, வல்வெட்டித்துறை.

போன்: 34 தந்தி: "சிற்றம்பலம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையின் முடிவு கண்ணியம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும். அற்பமான மூக்குத் தூள் ஒருசிட்டிகை அற்பமான ஒருகப் காப்பி இவை புகுவாரைப் பொறுத்துப் பலன். சிறந்த பேச்சுக்கள் சிறப்பான தீர்ப்புகள், சிறந்த திரைப்படங்கள் கடமையுடன் தயாரிக்கப்பட்ட மூக்குத்தூளையும் காப்பித் தண்ணீரையும் பொறுத்திருக்கிறது. சமூகத்தின் நன்மை தீமைக்குள் ஒவ்வொருவர் கடமையும் பின்னிக்கிடக்கிறது. நன்மைகள் உயர உயர அந்த சமூகம் மேம்பட்ட சமூகமாகும் தரக்குறைவும், கவனக்குறைவும் நிரம்பிய பொருள்கள் மிகமிக அந்தச் சமூகம் தாழ்ந்தப்பட்ட சமூகம். வளர்ச்சியற்ற வரட்சியான சமூகமாகும்.

ஒரு குடும்பத்தில் பல் விளக்காமல் ஒரு பிள்ளை சாப்பிடுகிறான். மற்றவன் குளிக்கச் சோம்பேறி. ஒருத்தி குளப்பை வேகவிடமாட்டாள். துணி தோய்த்தால், சோப்பு நுரை போக அலசமாட்டாள் என்றெல்லாம் இருக்குமானால் நிச்சயமாக அந்தக் குடும்பம் மேற்பட்டு வாழ முடியாது. நோயும் வறுமையும் அசிங்கமும் நிறைந்த குப்பை மேடாக வாழும்!

வீட்டிற்குள் அன்பு, கருணை இருந்து மட்டும் பயன் இல்லை சுத்தம், சுகாதாரம், கடமைஉணர்வு இருக்கவேண்டும். செய்வன எதையும் திருந்தச்செய்யும் உணர்வு வேண்டும். எதிலும் தேவைக்கு அதிகமான ஈடுபாடு இருக்கக்கூடாது. இக்கலைக் கண்ணோட்டம் இருப்பது போலவே சிறப்பான பொருள்களை நாட வேண்டும், கல்வி மீது நாட்டம் இருக்கவேண்டும். நீண்ட காலம் பலன்துறைகளில் குடும்பம் ஈடுபாடுகொள்ள வேண்டும்.

தொழில் செய்யாமல், நாம் பணம் சம்பாதிக்க முடியாது. தொழிலோ திறமைக்கு ஒப்பாகக் கிடைக்கக் கூடியது. திறமையோ கல்வி கலாச்சாரத்துடன் ஒன்றியது. அன்பு, நட்பு, கருணை, உற்சாகம், நிதானம், ஆர்வம் கொண்டால் மட்டும் போதாது. உடலை வணக்கி வேலைசெய்ய வேண்டும். உள்ளம் ஊன்றி வேலை செய்ய வேண்டும். உதவிடவில் இரக்கம் காட்டுவதாலும் பிறரை உற்சாகப்படுத்துவதாலும் நமது கடமை முடிந்துவிடாது.

ஈதல் குணம் நல்லதுதான் தர்மம் சிறந்ததுதான். ஆனாலும் கடமையைச் செய்த உனக்கு இந்த உதவியால் மேலும் கடமையைச்செய்ய உற்சாகம் ஏற்படும். சோம்பேறிக்கும் ஏமாற்றுக்காரனுக்கும் பிறரது தர்மத்தால் தீமையே உண்டாகும். எனவேதான் பாத்திரமறிந்து பிச்சையிடு என்ற அறிவுரை பிறந்தது.

இரக்கப்படவேண்டுவது வாயில்லா பிராணிகளுக்கும அங்கமிழந்த மக்களுக்கும் என்பார்கள் தனிநபர்கள் இரக்கப்படுவதைவிட, ஒரு சபை, ஒரு ஸ்தாபனம் காட்டும் இரக்கச் சித்தம் தகுந்த தொழில் முறைப்படி நடைபெறலாம். உலகத்தில் உதவி தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்ய எத்தனையோ சங்கங்கள் செயல்படுகின்றன. போர்க்களத்திற்குச் சென்றும் இரு சாராருக்கும் மருத்துவ உதவிசெய்யும் பணியாளர்கள் இருக்கிறார்கள்.

## கடமையைத்தூண்டும் சங்கங்கள்

சாரணர் இயக்கம், தெய்வ வழிபாட்டுச் சங்கங்கள், ஆத்திகக் கூட்டம் என்றெல்லாம் மக்கள் கடமையைச் செய்யத் தூண்டும் சங்கங்கள், ஆங்காங்கு செயல்படுவதைப் பார்க்கிறோம்.

தத்தம் கடமைகளை மகிழ்வோடும், மனத்தோடும் செய்து வந்தால் போதும் முன்னேற்றம் நாட்டிலே குதிபோட்டுக்கொண்டுமானுசப்பாய்ந்து நிற்கும். தான் செய்யவேண்டுவதை அறிந்தும், செய்யாமல் ஒரு சிலர் வாளா இருப்பார்கள். இதனால் முன்னேற்றத்தில் ஒரு பிளவே உண்டாகிறது. பிறரையும் தவறான பாதைக்கு அழைத்துப் போகிறது. சமூதாய உணர்வுக்கு உலை வைத்த கதையாக முடிகிறது.

## நாடுமுன்னேறுவதும் தடுமாறுவதும்

சிறந்தஅறிஞர்கள், சிறந்த மேதைகள் தங்கள் கடமையைச் செய்யத் தவறும் போது அங்கு அதிகப்படியான தீமைகள் உருவாகின்றன. பிறரை ஊக்குவிக்கும் ஆற்றல் படைத்தஅறிவு உரம் படைத்தவர்கள் தங்கள் கடமையைச் செய்யும் போது நாடு முன்னேறுகிறது. தக்கக் குட்டிகள் வாக்குளிக்கும்போது நாடு நிலை தடுமாறுகிறது.


எனவே நாட்டு மாந்தர் அனைவரும் தத்தம் கடமையில் ஆர்வமுள்ளவர்களாக இருந்து பிறருக்குத் தத்தம் கடமைகளில் உதவும் ஓர்வும் உணர்வும் தேவை. கடமைகள் தீமை பயக்குமென்ற பிறர்சொல்லுக்கு அஞ்சாமல் தன்மனச்சாட்சிக்கு மதிப்புக்கொடுத்து, கண்ணியத்துடன் செயல்படவேண்டும் தனது கடமையின் இனிய இன்பக் கனிப் பிறருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். தனக்குப்பின் பிறமனிதர்களும் பின்பற்ற வேண்டுமென்ற நல்லநோக்கம் ஒவ்வொருவர் கடமையிலும் இருக்க வேண்டும். தனக்குப்பின் எவரும் தன்னிடத்தைப் பிடிக்கக்கூடாது என்று எண்ணுவது வஞ்சமனத்தாரின் செயல் திறமையாகும்.

சிறந்ததான ஒன்றை உலகுக்கு விட்டுச் செல்ல கலைஞர்கள் மட்டுமில்லாமல் தொழிலாளர்களும் அறிஞர்களும் பாடுபட வேண்டும். போடும் செருப்பாக இருக்கலாம், புகழும் சிலையாக இருக்கலாம். தன்னுடைய ஆயுள்காலத்தில் தன்னுக் சிறப்புடைய பொருளைவிட்டுச்செல்லவேண்டும். போட்டுத் துப்பும் புகையிலையாக இருந்தால் என்ன? எண்ணி எண்ணி பார்க்கும் கவிதையாக இருந்தால் என்ன?

குடிசைத் தொழிலாளி முதல் கனரக முதலாளி வரை குமாஸ்தா முதல் உச்சநிலை அதிகாரிவரை தம் தம் தொழிலில் சிறப்புடைய சிரத்தினைக் காட்டப் பாடுபடவேண்டும். தெருக் கூட்டும் நண்பன் தொட்டு ஆபரேஷன் செய்யும் நிபுணர் வரை தன்னால் இயன்ற கடமையின் சிரத்தை நாட்டுக்கும் மக்களுக்கும் விட்டுப் போகவேண்டும். பிறருக்கு லட்சியமாக விளங்கவேண்டுவது கடமையைக் கைப்பிடித்தவர்களின் தொண்டு. கடமையைச் செய்து கரை கண்டவர்கள், அத்துறைக்கு

[9-ம் பக்கம் பார்க்க]


எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!



கண்ணையும்...கருத்தையும் கவரும்

தங்க-வைர நகைகளை தெரிவுசெய்ய

சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம். மீருன் சாஹிப்

தங்கப்பவுண் நகைமாளிகை

கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்

இத்திருநாளில் உங்கள் இல்லங்கள் பொலிவுடன் விளங்க

அழகும், பிரகாசமும், நீடித்து உழைக்கும் திறனும் ஒருங்கே அமையப்பெற்ற

"யாழ் மார்க்"

அலுமினியப் பாத்திரங்களை வாங்கிப் பாவியுங்கள்

மற்றும்

செம்பு, பித்தளைப் பாத்திரங்களையும் உற்பத்தி செய்பவர்கள்

யாழ். உலோகத் தொழிற்சாலை

250—254 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

தந்தி: "யாழ்மெற்றல்" போன்: 7049



மறவாதீர்கள்

ரேடியோக்களுக்கும் அதன் உறுப்புகளுக்கும்

வடமாகாணத்தில் சிறந்த ஸ்தாபனம்

S. சுலைமான்கண்டு & பிறதர்

5 & 7 மொம்பாசக் கட்டிடம்

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கையாளர்கட்கு

எங்கள் மனப்பூர்வமான

தீபாவளி வாழ்த்துக்களை

தெரிவிக்கின்றோம்.

CSK

சி. எஸ். கே.

தேங்காய் எண்ணை

பிண்ணாக்கு

மொத்த வியாபாரிகட்கு

விசேஷ சலுகைகள் ஒழுங்கு செய்துள்ளோம்.

விபரங்கட்கு:

ஆலை அலுவலகத்தில் தொடர்பு கொள்க

தொலைபேசி இல: 646

சி. எஸ். கே. மில்ஸ்

யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்

சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் உங்கள்

டயர்களைப் புதுப்பிப்பதற்கு

சிறந்த இடம்

நோர்தேண் இண்டஸ்றீஸ்

8/1 ஸ்ரான்லி வீதி (தொலைபேசி: 7158) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு மைதானம்

பருத்தித்துறை ஞாயிறு ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்தது ஒரு பொது விளையாட்டு மைதானமாவது இருக்கவேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சு இக் குறைபாட்டைப் போக்க முன்வரவேண்டும். இவ்வாறு நேற்று முன்தினம் நடந்த வதிரி திருஇருதயக் கல்லூரித் தினக்கொண்டாட்டத்தில் பேசிய நெல்லியடிப் பட்டினசபைத் தலைவர் திரு எஸ் பி தேவசகாயம் கூறினார். கல்லூரி அதிபர் திரு தோமஸ் ஈப்பென் தலைமை தாங்கினார். ......

## கடமையின்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்ற எண்ணற்ற கடமை வீரர்களுக்கு கலங்கரை விளக்காக இருப்பார்கள். பாதை தெரியாதவர்களுக்கு கைகாட்டியாக இருப்பார்கள். இருளும் மருளும் சூழவரும்போது ஒளியாகச் சுடர்தெறிப்பார்கள்.

கடமை என்பதைக்கருத்தாகச் செய்தவர்கள் இறந்தும் இறவாத நித்தியஉயிர் அநித்தியமான உலகத்தில் அமரராக இருப்பவர்கள் இவர்கள். உயர்மனிதனாக வாழ ஆசைப்படுகிறவர்கள் அமரனாக மறைவார்கள். எந்தத்தொழிலைச் செய்கிறவர்களுக்கும் பயம் இருக்கக்கூடாது. பாரபட்சம் இருக்கக்கூடாது. பிறருடைய தீமைக்குத் தலைவணங்கும் குணம் இருக்கக்கூடாது. கடமை ஒன்றே நினைவாக மூச்சாக, எண்ணமாக, செயலாக உயிராகத் தோற்றம் தருதல்வேண்டும்.

கடமையைச் செய்தவர்கள் காலத்தால் உயர்ந்த மாமனிதர்கள். மனத்தால் உயர்ந்த அமரராக மரணத்திற்குப் பின்பும் வழிகாட்டிகள்.

### சென். ஜோன் அம்புலன்ஸ் படை

# முதலுதவிப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் முதலுதவிப்படையினரின் அணிவகுப்பு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இலங்கை முதலுதவிப் படை ஆணையாளர் பேராசிரியர் மில்ரோய்போல் வைபவத்தில் விசேஷமாகக் கலந்து கொண்டார். யாழ்ப்பாணம் ஆணையாளர் முகாந்திரம் ஈ பி இராசையா மற்றும் திரு. டபிள்யூ என். தேவகடாட்சம் ஆகியோரின் சேவைகளை பேராசிரியர் மில்ரோய்போல் பாராட்டிப்பேசினார்.

முதலுதவிப்படையினர் நடாத்திய முதலுதவிப் போட்டியில் பின்வருவோர் வெற்றிபெற்றனர்.

முதற்பிரிவு: யாழ்ப்பாணம் பொலிஸ் படையினர்; காங்கேசன் துறைப்பொலிஸ் படையினர்.

இரண்டாம் பிரிவு: யாழ். கன்னியர்மட ஆங்கில பாடசாலை- யாழ். கன்னியர் மட தமிழ்ப்பாடசாலை, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம், யாழ். கன்னியர்மடப் பெண்பாடசாலை.

3ம் பிரிவு: சாவகச்சேரி சாரணர்குழு, காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலை, மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை.

### பதவியுயர்வு

யாழ்ப்பாண மாவட்ட முதலுதவிப்படை உத்தியோக அதிகாரியாக திரு வி ரி நடராசாவும், பிரதேச அதிகாரியாகத் திருமதி அந்தோனியசுவாமி நாதனும் பதவி உயர்த்தப் பெற்றனர்.

இதற்குரிய உத்தியோக பூர்வமான வைபவத்தில் இலங்கை முதலுதவிப்படையின் பிரதம ஆணையாளர் பேராசிரியர் மில்ரோய்போல் தம்பதிகள் அரசாங்க அதிபர் திரு நிமால் அமரசேகரா, அம்புலன்ஸ் படை யாழ். ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

18-10-71 சனி

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9 00)

294 மீ அல்லது 59 மீ

காலை 6-00 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை 6-25 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 தீபாவளி- சிறப்பு அம்சம், 7 15 தனிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய பாடல்கள், 8-30 சவிபரங்கம், 9-00 நாதஸ்வரம், 10-00 விசேஷ தீபவளி கதம்ப நிகழ்ச்சி 11-00 இளைஞர்மன்றம். 11-15 தொழிலாளர் நிகழ்ச்சி, 11-45 வீணை.

இரவு 6-10 இடைவேளை இசை. 6-15 இசைப்பயிற்சி. 6-30 பாட்டு, 7 00 கிராம சஞ்சிகை, 7-15 கதைப்பாட்டு. 7-30 பழஞ் சுவைகள், 7-45 கலாச்சார நிகழ்ச்சிகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-55 இஸ்லாமிய பாடல்கள், 9-30 விசேஷ தீபாவளி கதம்ப நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

## பாடசாலைகளை இணைக்கக் கோரிக்கை

பருத்தித்துறை, ஞாயிறு பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையையும், அங்குள்ள றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையையும் ஒன்றாக இணைத்து ஒரு மகாவித்தியாலயமாக்க வேண்டுமென ஒரு கோரிக்கையை மேற்படி பாடசாலைகளின் பெற்றார்- ஆசிரியர் சங்கங்கள் வடமாநிலக் கல்வி அதிபதி திரு டபிள்யூ டீ. சீ. மகாதந்திலாவுக்கும், பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு க துரைரத்தினத்திற்கும் விடுத்துள்ளன.

இன்றுள்ள சூழ்நிலையில் இவ்வித இணைப்பால் அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் இது நன்மைபயக்குமென்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## முக்கிய இலட்சியம்

பருத்தித்துறை. ஞாயிறு 'கூட்டுறவு இயக்கம் புனிதத்துவம் வாய்ந்தது. நேர்மையின்மை திருட்டு இருட்டுச்சந்தை ஆகியவற்றுக்குக் கூட்டுறவு இயக்கம் ஒரு போர்வையாக அமையக் கூடாது. பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதே கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய இலட்சியமாக அமையவேண்டும்'

இவ்வாறு கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவு ஆரம்ப சங்க ஊழியரின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி உரையாற்றிய வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். தம்பிமுத்து கூறினார்

## நவீன தபால் நிலையம்

காரதீவு, ஞாயிறு நெடுந்தீவுக் கிராமத்தில் நவீன வசதிகளுடன் கூடிய தபால் நிலையம் ஒன்று அமைக்கப்படவுருக்கிறது. அத்துடன் வெகுவிரைவில் நெடுந்தீவுக்கு நேரடித் தொலைபேசி வசதியும் செய்து கொடுக்கப்படவிருக்கிறது.

இத்தகவல்களை தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், தீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. வ. கதிரவேலுவுக்கு அறிவித்துள்ளார்.

......

## நன்கொடைப் பணம் போதாது

உடுவில் வெள்ளி 'சனசமூக நிலையங்களுக்கு அரசாங்கம் வழங்கி வரும் நன்கொடைப்பணம் மிக மிகக் குறைவு. கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த ஆண்டு சரிபாதியான தொகையே வழங்குகின்றார்கள். பொதுமக்களின் கல்வி வளர்ச்சிக்கும் கிராமங்களின் முன்னேற்றத்துக்குமாக அயராது உழைக்கும் சனசமூக நிலையங்களின் வளர்ச்சியை இது மிகவும் பாதிக்கும் எனவே இந்த நன்கொடைப் பணத்தை கூட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்''.

உடுவில் கிராமசபைப் பகுதி சனசமூக நிலையங்கள் விளையாட்டுக் கழகங்களின் சமாசத் தலைவர் திரு. செ. இலகுநாதன், உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்


இதோ! புதிய

பொலித்தியோன் ஈ.சி. 100%

(பெனிட்ரோதயோன் 100%)

BAYER


இந்தப் பெயரை மறவாதீர்கள்!
எந்தப் பயிருக்கும் ஏற்ற பாதுகாப்பு இதுவே!

நெல்லைப் பாதிக்கும் நெற் சந்துக்குத்தி, தத்துக்கிளி, கொப்புள ஈ, நெல் ஈ, பனிப்பூச்சி, ஐங்கோண மூட்டுப் பூச்சி, இலையரிப்புழுக்களையும்,

அன்னுசியைப் பாதிக்கும் மீலிபக்ஸ் புழுவையும் புகையிலை, காய்கறி, வெங்காயம், பருத்தியைப் பாதிக்கும் எல்லாப் பூச்சி புழுக்களையும் அழிக்க வல்லது பொலித்தியோன்.

பொலித்தியோன் ஈ.சி. 100% அதி வன்மை வாய்ந்தது. மிகவும் சிக்கனமானது.

2 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 4 அவு. பெனிட்ரோதயோன் 50%
4 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 8 „ „
8 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 16 „ „




பொலித்தியோன் ஒரு பேயர் தயாரிப்பு, நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பணலாபம் பெறப் பாவியுங்கள் பேயர் பீடை நாசினிகள்.

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட்



எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!




நீடித்த பாவனைக்கு டெகனைட் பற்றறிகளை உபயோகியுங்கள்:

ஏக விநியோகஸ்தர்கள்:

துரை அன் கோ

கண்டிறோட் — மரந்தன்



சகலவிதமான

மோட்டார், டீசல்

திருத்த வேலைகளுக்கு

றேட் அன் றுன்ஸ்போட் கொம்பனி லிமிட்.,

47, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனை ஏஜண்டுகள்:

★ லம்ப்றெட்டா ஸ்கூட்டர்கள்
★ 3சில்லு மோட்டார்வண்டிகள்
★ மிற்சுபிஷி பவர் டில்லர்கள்

போன்: 375 தந்தி: றேட்போட்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

